கோவில் பூனை

ஆன்றூ கிளெமென்ட்சு
படங்கள்: கேட் கெயிசுலர்
தமிழில்: சுப இலங்கை வேந்தன்



கோவில் பூனை

ஆன்றூ கிளெமென்ட்சு

படங்கள்: கேட் கெயிசுலர்

தமிழில்: சுப இலங்கை வேந்தன்



தொன்மையான 'நெபா' நகரில் ஒரு கோவில் இருந்தது,
அந்தக் கோவிலில் ஒரு பூனை வாழ்ந்தது.
ஆனால், அந்தப் பூனை சாதாரணமாக வாழவில்லை.
அந்தப் பூனையே அந்தக் கோவிலின் தெய்வம்.

அவன் குட்டியாய் இருந்ததிலிருந்தே
அங்கே நிறைய பணியாட்கள் இருந்தார்கள்
அவர்களுக்கு வேலையே இல்லை.
ஆனால், பூனையை அல்லும் பகலும்
கவனமாக பார்த்துக் கொண்டார்கள்.

அவர்கள் அவனுக்கு உணவூட்டினார்கள்.
அவர்கள் அவனுக்காக இசைத்தார்கள்
அவர்கள் அவனுக்காக நடனமாடினார்கள்
அவர்கள் அவனுக்காக ஒரு புனிதத் தீயை வளர்த்தார்கள்.



அவர்கள் அவனை கடவுளாகவே வணங்கினார்கள்.

அவர்கள் பூனைகளை எப்பொழுதிலிருந்து
வணங்கத் தொடங்கினார்கள் என்று
அந்த நிலத்திலிருந்த யாருக்குமே நினைவில்லை.
அந்தப் பூனைக்கும் நிச்சயமாக அதைப் பற்றி
தெரியவும் இல்லை கவலையும் இல்லை.
அவனுக்குத் தெரிந்ததெல்லாம்
அந்தக் கோவிலில் கடவுளாயிருப்பதில்
பெரிதாக எந்த குதூகலமுமில்லை.

அவன் நீரில் தெரியும் ஒரு மீனைப் பிடிக்க முயலும் பொழுது

ஒரு பணியாள் ஓடி அவனுக்காக மீனைப் பிடிப்பான்.
பின் நல்ல நறுமணப் பொருட்களைச் சேர்த்து சமைப்பான்.
பிறகு அவனுக்கு சிறிய தங்கக் கிண்ணத்தில் பரிமாறுவான்.



அவன் சாளரத்தில் தாவி குளிர்ச்சியான
பாறையில், சூரிய ஒளிபட
நீட்டிப் படுக்க எத்தனிக்கும் பொழுது
ஒரு பணியாள் அவனை அலுங்காமல் தூக்கி
அவனது கருஞ்சிவப்பு தலையணையில்
கிடத்தி விடுவான்.

அவன் தன்னந்தனியாக
இரவில் உலாத்தவும்
நிலவொளியில் பறக்கும்
சிறு பூச்சிகளை பிடிக்கவும்
தன் நிழலைப் பார்த்தே
பயங்கொள்ளவும் விரும்பினால்,...

ஒரு பணியாள் அவன் பின்னாலேயே
விளக்கு பிடித்துக் கொண்டு,
விசிறியால் வீசிக் கொண்டு
தொடர்ந்து வருவான்
எல்லா குதூகலத்தையும் கெடுப்பான்



கோவிலின் மன்றத்தினைத் தாண்டி,
அவனுடைய வளர்த்தியான பணியாளான்
கூட எட்டிவிட இயலாத
ஒரு வாதாம் மரத்தின்
உச்சாணிக் கிளையில் அமர்ந்து,
அவனால் உயரமான சுற்றுச் சுவரைத்
தாண்டியும் பார்க்க முடிந்தது.
அங்கே வீதிகளில் குழந்தைகள்
விளையாடிக் கொண்டிருந்தார்கள்
உலகத்திலுள்ள மற்ற பூனைகள் அங்கே
கட்டற்று சுற்றித் திரிந்தன.



எனவே, ஒரு பின்னிரவில்

ஓசையின்றி காற்றைப் போல வெளியேறினான்

முதலில், கோவிலின் முற்றத்தினூடே
பிறகு சிறு பாதை, அடுத்து சந்து
பின்னர் வேலியேறி, வயல்களின் நடுவே
மேய்ச்சல்காரன் மூலம் மலையேறி,
சாலையை ஒட்டியே, ஒரு ஊருக்குள்....
கடைசியாக சூரியன் மேலெழும்பியதால்
சிறு கொட்டகையில் ஓய்வெடுத்தான்.
இதுவரை தூங்காதவாறு தூங்கிப் போனான்.

கடற்கரையோரம் வரும் வரை
மேலும் இதே போல மூன்று இரவுகள் பயணித்தான்.

அது குளிராய் இருந்தது
அங்கே வாசலில் மணல் மேல்
புகையோடு எரிந்து கொண்டிருந்த
சிறு குடிசையை நோக்கிச் சென்றான்.
தீவளையத்தை கவனமாக சுற்றிச் சென்று
'மியாவ்' என்றான்.
இரவுகளில் நடந்ததும் ஏதும் உண்ணாதிருப்பதும்
அவனை இளைத்தும் கோரமாகவும் காட்டியது.
யாராலும், அவனது பணியாளர்களால் கூட
அவன் தான் அவர்களின் கடவுள் என,
அவனை அடையாளம் காண இயலாது.



அங்கே முக்காலியில் உட்கார்ந்திருந்த மனிதன்
ஒரு மீனின் தலையைத் தூக்கிப் போட்டான்.
அந்த சிறு பூனை வாழ்வில் முதல் முறையாக
அசல் பூனைக்கான உணவை உண்டது.
இது போன்ற அருமையான சுவையை அது
சுவைத்ததே இல்லை.

அடுத்து அவன் மீனவனின் கால்களை உரசினான்.

மீனவன் அவன் காதுகளை வருடிக் கொடுத்தான்.

அது போன்ற தொடுதலை அவன் உணர்ந்ததே இல்லை.

மறுநாள் அதிகாலையில்
மீனவனின் குழந்தைகள்
துள்ளிக் குதித்து வெளியே
வெளிச்சத்திற்கு வந்தார்கள்.

சட்டென நின்றார்கள்.

திடீரென அது நடந்தது,
அவனுக்கு எது மிகவும் பிடிக்குமென
அவனே அறியாத அவனின்
ஆழ்மன ஆசை நிறைவேறியது.

அவன் குழந்தைகளுடன் விளையாடினான்.
அவர்கள்அவனை நேசித்தார்கள்.